بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 28 March 2014 (Tamil)**

## இமாம் மஹ்தியின் உண்மைக்கு இறைவன் காட்டிய அடையாளங்கள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

'' இன்றும் நான், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் (உண்மைக்கான இறை) அடையாளங்களையும், மேற்கோள்களையும், அன்னார் கூறிய சில சம்பவங்களையும் அல்லது மக்களே கூறிய சில சம்பவங்களையும் பற்றி எடுத்துக் கூறுவேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள் :**

'' அல்லாஹ் எனக்கு ஆதரவாக எத்தகைய அடையாளங்களை வெளிப்படுத்தியிருக்கிறான் என்றால், இன்றைய நாளாகிய 16 ஜூலை 1906 - லிருந்து நான் அவற்றை தனித்தனியாக எண்ணினால் அவை 3 லட்சத்தை விட அதிகமானவையாக இருக்கும் என நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். எவராவது நான் ஆணையிட்டுக் கூறுவதை நம்பவில்லை என்றால், நான் அதற்கு சான்று தர முடியும். சில இறையடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், அவற்றில் இறைவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது வாக்குறுதிக்கேற்ப என்னை எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாத்தான். மேலும் சில இறையடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், அவற்றில் இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப எனது தேவைகளையும், அவசியமானவற்றையும் நிறைவேற்றினான். மேலும் இன்னும் சில இறையடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், அவற்றில் **'இன்னீ முஹீனும் மன் அராத இஹானதக'** (உம்மை இழிவுபடுத்துவோரை நிச்சயமாக நான் இழிவுபடுத்துவேன்) என்ற வாக்குறுதிக்கேற்ப என் மீது தாக்குதல் செய்பவர்களை இழிவுக்கும், அவமானத்திற்கும் ஆளாக்கினான். மேலும் இன்னும் சில இறையடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், என் மீது (பொய்) வழக்கு தொடுப்பவர்களின் மீது தனது முன்னறிவிப்புக்கேற்ப எனக்கு வெற்றியை வழங்கினான்.

மேலும் இன்னும் சில இறையடையாளங்கள் நான் இறைவனால் நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து தோன்றியுள்ளன. ஏனெனில் உலகம் தோன்றியதிலிருந்து இவ்வளவு நீண்ட இந்த காலகட்டம் வேறு எந்த பொய்யருக்கும் கிடைக்கவில்லை. மேலும் சில அடையாளங்கள் இந்த காலத்தின் நிலையை பார்ப்பதனால் உருவாகின்றன. அதாவது, இந்தக் காலம் ஓர் இமாம் தோன்றுவதன் தேவையை ஒப்புக்கொள்கிறது. இன்னும் சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், அவற்றில் நண்பர்களுக்காக நான் செய்த துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் சில துஆக்கள் எப்படிப்பட்டவை என்றால், கடும் எதிரிகளின் மீது எனது பத் (தீய) துஆக்களின் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், எனது துஆக்களினால் சில பயங்கரமான நோயாளிகள் குணமடைந்துள்ளனர். மேலும் அவர்கள் குணமடைவதற்கு முன் எனக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்னும் சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், எனது உண்மைக்கான சான்றாக புகழ் பெற்ற, சிறப்புத்தன்மை கொண்ட சான்றோர்களுக்கு கனவுகள் வந்தன. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கனவில் கண்டனர். உதாரணமாக, ஒரு இலட்சம் முரீதுகளைக் கொண்ட இறைஞானம் மிக்க சிந்து மற்றும் காஜா குலாம் ஃபரீது சாஹிப் ஆகியோர். மேலும் இன்னும் சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், ஆயிரக்கணக்கான மக்களுக்கு, 'இவர் உண்மையாளர்; இறைவன்

புறமிருந்து வந்தவர்' என கனவில் அவர்களுக்கு காட்டப்பட்டதனால் அவர்கள் என்னிடம் பைஅத் செய்தனர். சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கனவில் கண்டனர்; அதில் அன்னார் (ஸல்), 'உலகம் முடிவடையப் போகின்றது; மேலும் இவர் இறைவனின் கடைசி கலீஃபா மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார்' என அவர்களுக்குக் கூறினார்கள். அதன் காரணமாக அவர்கள் பைஅத் செய்தனர். இன்னும் சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால், சில பெரியவர்கள் எனது பிறப்பிற்கு முன்னர் அல்லது பெரியவனாவதற்கு முன்னர் எனது பெயரை எடுத்துக் கூறி, நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பதற்கான செய்தியைத் தெரிவித்திருந்தார்கள். உதாரணமாக, நிஃமத்துல்லாஹ் வலி, லூதியானா மாவட்டம் ஜமால்பூர் நகரைச் சேர்ந்த மியான் குலாப் ஷாஹ்ஆகியோர்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னோரிடத்தில் கூறுகிறார்கள் :**

''கஷ்ஃபே குபூர். (கபரிலுள்ளவர்களை காண்பிப்பது). அதாவது இறந்தவர்களின் நிலைமைகளை அறிந்து சொல்ல முடியும். அல்லது அவர்களை சந்திக்க வைக்க முடியும். ஒரு நீண்ட காலத்திற்கு முன்னர் இறைவன் என்னிடம் இவ்வாறு கூறி இருந்தான்: **யஃதூன மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக். வயஃதீக மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக்.** அதாவது, மிக நீண்ட தொலைவிலிருந்து மக்கள் உம்மிடம் வருவார்கள்; மேலும் மிக நீண்ட தொலைவிலிருந்து உம்மிடம் உதவிகள் வரும். எவரும் என்னை அறியாதிருந்த அந்தக் காலத்தில் இறைவன் எனக்கு இதை அறிவித்திருந்தான். இப்போது இந்த முன்னறிவிப்பு எவ்வளவு உறுதியாகவும்,வலுவாகவும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது! இதற்கு நிகரானது ஏதாவது இருக்கிறதா? பாருங்கள். இறைவனின் அடையாளங்களை நீங்கள் அவமதிக்காதீர்கள் என நான் உண்மையாகவே கூறுகிறேன். மேலும் அவற்றை ஏளனமாகக் கருதாதீர்கள். அது இழப்பிற்கான அடையாளங்களாகும். மேலும் இறைவன் அதை விரும்புவதில்லை. நேற்று நடந்த விஷயம். லேக்ராம் இறைவனின் மகத்தான அடையாளத்திற்கேற்ப கொல்லப்பட்டார். இந்த முன்னறிவிப்பிற்கு கோடிக்கணக்கான மக்கள் சாட்சிகளாவர். லேக்ராமே அ(ந்த அடையாளத்)தை பிரசித்தி பெறச் செய்தார். அதை அவர் தான் சென்ற இடங்களிலெல்லாம் கூறினார். இந்த அடையாளத்தை அவர் இஸ்லாத்தின் உண்மைக்காக அவரே கேட்டு வாங்கினார். மேலும் அதை உண்மை மார்க்கத்திற்கும் பொய்யான மார்க்கத்திற்கும் ஓர் அளவுகோலாக நிலைநாட்டினார். கடைசியில் அவரே இஸ்லாத்தின் உண்மைக்கும் எனது உண்மைக்கும் தனது இரத்தத்தின் மூலமாக சாட்சி கூறக்கூடியவரானார். இந்த அடையாளத்தை பொய்ப்படுத்துவதும் இதை பொருட்படுத்தாமல் இருப்பதும் எந்த அளவுக்கு அநீதியும், நேர்மையற்றதுமாகும்! **மேலும் இப்படிப்பட்ட மிகத் தெளிவான இறையடையாளங்களை மறுப்பது லேக்ராமாக மாறுவதை தவிர வேறு என்ன?**

எப்படிப்பட்ட நிலையில் இறைவன் இத்தகைய அருளை செய்திருக்கிறான்! அவன் எல்லா சமுதாயங்களைப் பற்றியும் அடையாளங்களைக் காட்டினான்; அழகான, கம்பீரமான எல்லா விதமான அடையாளங்களும் காட்டப்பட்டன. பிறகு அவற்றை வீணானவற்றைப் போன்று தூக்கி எறிவதை நினைத்து எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகிறது. இது மிகப் பெரும் பாக்கியமிழந்ததன்மையும் அல்லாஹ்வின் கோபத்திற்கு இலக்காவதுமாகும். எவர் அல்லாஹ்வின் அடையாளங்களை பொருட்படுத்த மாட்டாரோ அவரை அல்லாஹ்வும் பொருட்படுத்துவதில்லை என்பதை அவர் நினைவிற்கொள்ளட்டும். இறைவன் புறமிருந்து வெளிப்படும் அடையாளங்கள் எப்படிப்பட்டவையாக இருக்கின்றன என்றால், ஓர் அறிவுள்ளவர், இறைவனுக்கு அஞ்சுபவர் அவற்றை அடையாளம் கண்டு கொள்கிறார். மேலும் அவற்றிலிருந்து பலன் பெறுகிறார். ஆனால் அறிவில்லாதவர், இறையச்சத்தை முன் நிறுத்தியவாறு அவற்றை சிந்திக்காதவர் இழப்பிற்குரியவராகி விடுகிறார். ஏனெனில் உலகம் மட்டுமே இருக்கட்டும்; ஈமானுக்குள் இருக்கும் ஈமானின் அந்த நிலைமை இருக்க வேண்டாம் என அவர் நினைக்கிறார். இறைவன் அவ்வாறு ஒருபோதும் செய்வதில்லை. அப்படி இருந்தால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை மறுக்க வேண்டிய தேவை யூதர்களுக்கு என்ன வந்து விட்டது? மூஸா (அலை) அவர்கள் ஏன் மறுக்கப்பட்டார்கள்? பிறகு எல்லாவற்றையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அளவுக்கு துன்பங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டிய தேவை என்ன வந்து விட்டது? மறைவானவற்றின் மீதுள்ள ஈமானே சென்றுவிடுமளவுக்கு அடையாளத்தைக் காட்டுவது இறைவனுடைய பழக்கமே அன்று. ஒரு முட்டாள், காட்டுமிராண்டி, அல்லாஹ்வின் நடைமுறையை அறியாதவர் வேண்டுமானால் மறைவானவற்றின் மீதுள்ள ஈமான் எனும்

வட்டத்தை விட்டும் வெளியேறிவிடும் ஒரு விஷயத்தை முஃஜிஸா (அற்புதம்) என்றும் அடையாளம் என்றும் கூறலாம். ஆனால் அல்லாஹ் அப்படி ஒருபோதும் செய்வதில்லை. அல்லாஹ் நமது ஜமாஅத்திற்காக (அடையாளங்களில்) எவ்வித குறைவையும் வைக்கவில்லை. எவரும் எவருக்கு முன்னாலும் ஒருபோதும் வெட்கப்பட வேண்டியதில்லை. **இந்த இயக்கத்தில் இணைந்தவர்களில் எவரும், நான் எவ்வித அடையாளத்தையும் காணவில்லை என்று கூறுமளவுக்கு ஒருவர் கூட இல்லை.**

பராஹீனே அஹ்மதிய்யா எனும் நுலைப் படியுங்கள். மேலும் அது பற்றி சிந்தியுங்கள். இந்த காலத்தைப் பற்றிய எல்லா செய்திகளும் அதில் இருக்கின்றன. நண்பர்களைப் பற்றியும் இருக்கின்றன; எதிரிகளைப் பற்றியும் இருக்கின்றன. 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஜமாஅத்தின் பெயரும் அடையாளமும் கூட இருக்கவில்லை; மேலும் என் வாழ்வைப் பற்றி, இவ்வளவு காலம் நான் இருப்பேனா இருக்க மாட்டேனா என்பது கூட தெரிய முடியாதிருந்தது. அப்படிப்பட்ட காலத்தில் இத்தகைய செய்திகளை தெரிவித்து பிறகு அவை நிறைவேறவும் செய்வது ஆகிய இவையெல்லாம் மனித சக்திக்குட்பட்டதா என்ன? ஒன்றல்ல, இரண்டல்ல முழு பராஹீனே அஹ்மதிய்யாவும் அஹ்மதி மக்களின் வீடுகளிலும் இருக்கின்றது. கிறித்தவர்கள், ஆரியர்கள், அரசாங்கம் ஆகியோரிடமும் இருக்கின்றது. இறையச்சம் இருந்தால், உண்மையைத் தேடுகின்றீர்கள் என்றால் பராஹீனின் அடையாளங்களின் அடிப்படையிலேயே தீர்மானியுங்கள். பாருங்கள். அந்த காலத்தில் எவரும் என்னை அறியாதிருந்தனர்; எவரும் இங்கு வந்தது கூட இல்லை; ஒரு மனிதர் கூட என்னுடன் இருந்ததில்லை.அப்படிப்பட்ட காலத்தில் இப்போது இங்கு இருக்கக் கூடிய ஜமாஅத்தைப் பற்றி அவன் அறிவித்தான். இந்த முன்னறிவிப்பு கற்பனையானதும், பகட்டானதுமாக இருந்ததென்றால் இன்று இவ்வளவு பெரிய ஜமாஅத் ஏன் இருக்கிறது? மேலும் எவரைப் பற்றி காதியானைத் தவிர வேறு யாருக்கும் தெரியாதிருந்ததோ, எவரைப் பற்றி பராஹீனே அஹ்மதிய்யா நூலில், **‘ஃபஹான அன் துஹான வதுஃரஃபு பைனன்னாஸ்’ அதாவது உமக்கு உதவி செய்வதற்கான நேரம் வந்து விட்டது; நீர் மக்களுக்கு மத்தியில் புகழ்பெற்றவராக ஆக்கப்படுவீர்** என்று கூறப்பட்டதோ அது எப்படி நிறைவேறியது? ’’

மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இன்று இந்தியாவில் மட்டுமல்ல; மாறாக, அரபுநாடு, சிரியா, எகிப்து ஆகிய நாடுகளையும் கடந்து ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா வரை இவரைப் பற்றி மக்கள் இனம் கண்டு கொண்டு விட்டார்கள். அண்மையில் மூன்று நாட்கள் காதியானிலிருந்து அரபு நாடுகளுக்கென்று ஒரு நிகழ்ச்சி ஒளிபரப்பானது. அது அரபு உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி விட்டது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள் :**

‘‘ இது அல்லாஹ்வின் வார்த்தையாக இல்லாதிருக்குமென்றால், இறைவனின் விருப்பத்திற்கு மாறான ஓர் இட்டுக்கட்டப்பட்டவரின் சதித்திட்டமாக இருக்குமென்றால் இறைவன் இதற்கு ஏன் உதவி செய்தான்? இதற்காக இப்படிப்பட்ட வழிவகைகளையும் வசதிகளையும் ஏன் ஏற்படுத்திக் கொடுத்தான்? இவையெல்லாவற்ரையும் நான் உருவாக்கிக் கொண்டேனா என்ன? அல்லாஹ் ஏதாவதோர் இட்டுக்கட்டிக் கூறுபவருக்கு இவ்வாறே உதவி செய்கின்றான் என்றால் பிறகு உண்மையாளர்களின் உண்மைக்கு என்ன அளவுகோல் இருக்க முடியும்? நீங்களே இதற்கு பதில் கூறுங்கள். சூரிய கிரகணம், சந்திர கிரகணம் ஆகியவற்றை ஏற்படுத்துவது எனது சக்திக்குட்பட்ட விஷயமா என்ன - அதை நான் எனது காலத்தில் ஏற்படுத்துவதற்கு! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மை மஹ்திக்கான அடையாளமாக இதைக் குறிப்பிட்டதைப் போன்று இறைவன் அந்த அடையாளத்தை எனது வாதத்தின் காலத்தில் நிறைவேற்றி விட்டான். நான் அவன் புறமிருந்து வரவில்லை என்றால், இறைவனே உலகத்தை வழிகெடுத்து விட்டானா என்ன? என்னை மறுப்பதன் பாதிப்பு எங்கு வரை சென்றடைகிறது? என சிந்தித்து பதில் கூற வேண்டும்.அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மறுப்பதும், அல்லாஹ்வை மறுப்பதும் கட்டாயமாகி விடுகிறது. அவ்வாறே எந்த அளவுக்கு அடையாளங்கள் இருக்கின்றனவென்றால், அவற்றின் எண்ணிக்கை இரண்டு, நான்கு அல்ல; மாறாக ஆயிரக்கணக்கில் - இலட்சக்கணக்கில் சென்று விடுகிறது. நீங்கள் எவற்றையெல்லாம் மறுப்பீர்கள்?’’

‘‘இதே பராஹீனே அஹ்மதிய்யாவில் **யஃதூன மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக். வயஃதீக மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக்.** (மிக நீண்ட தொலைவிலிருந்து மக்கள் உம்மிடம் வருவார்கள்; மேலும்

மிக நீண்ட தொலைவிலிருந்து உம்மிடம் உதவிகள் வரும்) என்ற இறையறிவிப்பும் எழுதப்பட்டிருக்கிறது. இப்போது நீங்களும் இங்கு வந்ததன் மூலம் ஓர் அடையாளத்தை நிறைவேற்றியுள்ளீர்கள். நீங்கள் வந்ததனால் நிறைவேற்றிய இந்த அடையாளத்தை உங்களால் அழிக்க முடிந்தால் அழியுங்கள். அல்லாஹ்வின் அடையாளங்களை பொய்ப்படுத்துவது நல்லதன்று; அதனால் இறைவனின் கோபம் பொங்கி எழுகிறது எனக் கூறுகிறேன். எனது உள்ளத்தில் இருந்ததை நான் கூறி விட்டேன். இனி, ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாதிருப்பதும் உங்களின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். நான் உண்மையாளன் ஆவேன்; மேலும் நான் அவன் பக்கமிருந்தே வந்திருக்கிறேன்.''

## நோயிலிருந்து குணமடைவதற்கான இறையடையாளங்கள்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள் :**

''மல்யார் கோட்லாவைச் சேர்ந்த சர்தார் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களின் மகன் அப்துர் ரஹீம் கான் என்பவர் கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். உயிர் பிழைப்பதற்கான எவ்வித அடையாளமும் தென்படவில்லை. மரணித்தவரைப் போன்று ஆகி விட்டார். அப்போது நான் அவருக்காக துஆ செய்தேன். தக்தீரே முப்ரம் (மாறாத இறைநியதி) என்பது போன்று தெரிந்தது. அப்போது நான் இறைவனிடம், இறைவா! நான் இவருக்காக பரிந்துரை செய்கிறேன் என வேண்டினேன். அப்போது இறைவன்,**'மன் ஸல்லதீ யஷ்ஃபவு இந்தஹூ இல்லா பியிஸ்னிஹீ'** - இறைவனின் அனுமதியின்றி ஒருவருக்கு பரிந்துரை செய்வது யாருக்கு தைரியம் இருக்கிறது? எனக் கூறினான். அப்போது நான் மவுனமாகி விட்டேன். பிறகு காலதாமதமின்றி, **'இன்னக அன்தன் மஜாஸ்'**என இல்ஹாம் இறங்கியது. அதாவது பரிந்துரை செய்வதற்கு உமக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அப்போது நான் மிகவும் மன்றாடலுடனும் உருக்கத்துடனும் துஆ செய்யத் துவங்கினேன். இறைவன் எனது துஆவை ஏற்றுக் கொண்டான். பையன் கபரிலிருந்து வெளிவந்தது போன்று வெளியேறி உடல் சுகத்திற்கான அடையாளங்கள் தென்படத் தொடங்கின. அவன் மிகவும் பலவீனமாகிவிட்டிருந்தான். நீண்ட காலத்திற்குப் பிறகு அவன் தனது அசல் உடல் நிலைக்குத் திரும்பினான். உடல் நலம் பெற்றான்.''

## எதிரிகள் அழிவுக்குள்ளாகும் அடையாளங்கள்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''சீர்ருல் கிலாஃபா என்ற நூலின் 62-ஆம் பக்கத்தில் 71-ஆவது அடையாளமாக நான் எழுதிருப்பது என்னவெனில், எதிரிகளின் மீது பிளேக் நோய் வருவதற்காக நான் துஆ செய்திருந்தேன் - அதாவது எவருடைய பாக்கியத்தில் நேர்வழி இல்லையோ அப்படிப்பட்ட எதிரிகளுக்கு. எனவே இந்த துஆவினால் பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாட்டில் பிளேக் நோய் அதிகமானது. மேலும் பல கடுமையான எதிரிகள் இவ்வுலகை விட்டுச் சென்று விட்டனர்.

மேலும் இதற்குப் பிறகு (பாரஸீக மொழியில்) 'நீ பல எதிரிகளின் வீடுகளை நாசமாக்கி விட்டாய்' என இல்ஹாம் இறங்கியது. இது நிறைவேறியவாறு முன்னறிவிப்புகளுக்கேற்ப பிளேக் நோய் எனும் தண்டனை அவர்கள் மீது நெருப்பைப் போன்று பொழிந்தது. மேலும் என்னைப் பொய்ப்படுத்திய, தீயதாகக் குறிப்பிட்ட பல்லாயிரக்கணக்கான எதிரிகள் அழிந்தனர். ஆயினும் இந்த இடத்தில் முன்மாதிரிக்காக நாம் சில கடும் எதிரிகளின் அழிவைப் பற்றிக் குறிப்பிடுகிறோம். முதன் முதலில் அமிர்தசரஸைச் சேர்ந்த மவ்லவி ருஸூல் பாபா என்பவர் குறிப்பிட வேண்டியவர். அவர் எனக்கு மறுப்புரையாக நூல் எழுதினார். மேலும் மிகக் கடுமையான சொற்களை பயன்படுத்தினார். மேலும் சில நாள் வாழ்க்கையின் மீது மோகம் கொண்டு பொய்யுரைத்தார். கடைசியில் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப பிளேக் நோயினால் நாசமானார். பிறகு முஹம்மது பக்ஷ் என்ற பெயரைக் கொண்ட படாலா டிபுடி இன்ஸ்பெக்டர் ஒருவர் பகைமை காட்டுவதிலும் துன்பம் கொடுப்பதிலும் ஈடுபட்டார். அவரும் பிளேக் நோயால் நாசமானார். பிறகு ஜம்முவைச் சேர்ந்த சிராக் தீன் என்ற பெயரைக் கொண்ட ஒருவர் ரஸூல் என வாதம் செய்தார். அவர் எனக்கு தஜ்ஜால் என பெயர் வைத்தார். மேலும் கனவில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவருக்கு ஒரு தடியைக் கொடுத்து அந்த ஈஸாவின் தடியால் இந்த தஜ்ஜாலைக் கொல்ல வேண்டும் எனக் கூறியதாகக் குறிப்பிட்டார். எனவே அவருடைய வாழ்நாளிலேயே வெளியிடப்பட்ட எனது நூலாகிய'தாஃபிவுல் பலா வ மிஃயாரு அஹ்லில் இஸ்தஃபா' என்பதில் அவரைப் பற்றி

கூறப்பட்டதற்கிணங்க 4 ஏப்ரல் 1906 அன்று தனது இரு மகன்களுடன் பிளேக் நோயினால் நாசமடைந்தார். எந்த ஈஸாவின் தடியால் அவர் என்னை அழிக்கவிருந்தாரோ அது எங்கே சென்றது? மேலும் **'இன்னீ லமினல் முர்ஸலீன்'**(நிச்சயமாக நான் தூதர்களில் ஒருவனாவேன்) என்று கூறிய அவரது இல்ஹாம் எங்கே போயிற்று? பெரும்பாலார் மனம் தூய்மையடைவதற்கு முன்னரே மன ஊசலாட்டத்தையே இல்ஹாம் எனக் குறிப்பிடுகின்றனர். எனவே கடைசியில் மிக இழிவாகவும் அவமானமாகவும் அவர்களுக்கு மரணம் ஏற்படுகிறது. இவர்களைத் தவிர, துன்பமிழைப்பதிலும், அவமானத்தை ஏற்படுத்துவதிலும் எல்லை மீறிய இன்னும் பலர் இருக்கின்றனர். அவர்கள் இறை தண்டனைக்கு அஞ்சவில்லை. இரவு பகலாக கேலி கிண்டல் செய்வது, ஏசுவது ஆகியவை அவர்களின் வேலையாக இருந்தது. கடைசியில் பிளேக் நோயிற்கு இரையானார்கள்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''இறைவன் என்னை சீர்திருத்தத்திற்காக நியமித்து அனுபியிருக்கிறான். மேலும் என் கைகளில் எத்தகைய அடையாளங்களைக் காட்டினான் என்றால்,எவர்களுடைய இயல்புகள் காழ்ப்புணர்ச்சியிலிருந்து தூய்மையாக இருக்கின்றதோ, உள்ளத்தில் இறையச்சம் இருக்கின்றதோ, பகுத்தறிவை பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றார்களோ அந்த மக்களுக்கு அந்த அடையாளங்கள் பற்றி தெரிய வந்தால், அவர்கள் இஸ்லாத்தின் உண்மையை நன்றாக அடையாளம் கண்டு கொள்வார்கள். அவை ஒன்றிரண்டல்ல; மாறாக, ஆயிரக்கணக்கான அடையாளங்களாகும். அவற்றில் சிலவற்றை நாம் நமது 'ஹகீகத்துல் வஹீ' எனும் நூலில் எழுதியிருக்கின்றோம். ஹிஜ்ரி ஆண்டின் 13-ஆம் நூற்றாண்டு முடிந்து விட்டபோது இறைவன் என்னை 14-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் என்னை தன் புறமிருந்து அனுப்பினான். மேலும் ஆதமிலிருந்து கடைசி வரை தோன்றிய அத்தனை நபியின் பெயர்களையும் எனக்குப் பெயராக வைத்தான். மேலும் எனது கடைசி பெயராக வாக்களிக்கப்பட்ட ஈஸா, காலத்தின் அஹ்மது, முஹம்மது என வைத்தான். மேலும் இந்த இரு பெயர்களைக் கொண்டு என்னை மீண்டும் மீண்டும் அழைத்தான். இந்த இரு பெயர்களையும் வேறு சொற்களில் மஸீஹ் என்றும் மஹ்தி என்றும் கூறப்பட்டிருக்கிறது. மேலும் என்ன அற்புதங்கள் வழங்கப்பட்டனவோ அவற்றில் சில மறைவான செய்திகளைக் கொண்டவையாகும். அவற்றை எடுத்துரைப்பது இறைவனைத் தவிர வேறு எவருடைய அதிகாரத்திற்குட்பட்டதோ அல்லது சக்திக்குட்பட்டதோ அல்ல. மேலும் சில துஆக்கள் ஒப்புக்கொள்ளப்பட்டு அவை பற்றி எடுத்துரைக்கப்பட்டன. சில பத் துஆ (தீய துஆ)க்கள் இருக்கின்றன. அவற்றின் மூலமாக தீங்கிழைக்கும் எதிரிகள் நாசமாயினர். மேலும் இன்னும் சில துஆக்கள் பரிந்துரை வகையைச் சார்ந்தவையாகும். அவற்றின் அந்தஸ்து துஆவை விட மேலானவையாகும். சில முபாஹலாக்கள் இருக்கின்றன. அதன் விளைவாக இறைவன் எதிரிகளை நாசத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாக்கினான். சில காலத்தின் சாலிஹ் (நல்லவர்)களின் சாட்சியங்களாகும்; அவர்கள் இறைவனிடமிருந்து இல்ஹாமைப் பெற்று எனது உண்மைக்கு சாட்சி கூறினார்கள். இன்னும் சில இஸ்லாத்தின்சாலிஹீன்களின் சாட்சியங்களாகும். அவர்கள் எனது தோற்றத்திற்கு முன்பே மரணித்து விட்டனர். ஆனால் அவர்கள் எனது பெயரைக் கூறி, எனது கிராமத்தின் பெயரை எடுத்துக் கூறி, இவர்தான் சீக்கிரம் வரக் கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார் என சாட்சி கூறியிருந்தனர். இன்னும் சிலர் நான் பிறப்பதற்கு முன்பே நான் தோன்றுவது பற்றி செய்தி தெரிவித்திருந்தனர். வேறு சிலர் எனக்கு 10, 12 வயது இருக்கும்போது எனது தோற்றத்தைப் பற்றி அறிவித்திருந்தனர். மேலும் அவர்கள் தமது முரீதுகளுக்கு நீங்கள் இந்த அளவுக்கு நீண்ட ஆயுளைப் பெறுவீர்கள்; (மஹ்தியாகிய) அவரைக் காண்பீர்கள் எனக் கூறிச் சென்றனர். காலத்தின் மஹ்திக்கான அடையாளமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அதாவது, ரமலானில் சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்படுவது, நாட்டில் பிளேக் நோய் பரவுவது ஆகியவை. இந்த எல்லா சாட்சியங்களும் எனக்காக வெளிப்பட்டு விட்டன. இப்போது 14-ஆம் நூற்றாண்டின் 4-ஆவது பகுதியை நான் பெற்று விட்டேன். இவை எந்த அளவுக்கு சான்றுகளையும், சாட்சியங்களையும் கொண்டுள்ளனவென்றால், அவை அனைத்தும் எழுதப்பட்டால் ஆயிரக்கணக்கான தொகுதிகளிலும் அவை அடங்க முடியாது.''

### மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதற்கான சம்பவங்கள்

ஹஸ்ரத் ஷேக் முஹம்மது அஃப்ஸல் சாஹிப் கூறுகிறார்கள்: ''எனக்கு 12 வயதாக

இருக்கும்போது எனது குடும்பத்திலுள்ள எனது பெரிய தந்தை ஹகீம் ஷேக் இபாதுல்லாஹ் சாஹிப் மற்றும் எனது பெரிய தந்தையின் மகன் ஷேக் கரம் இலாஹி சாஹிப் ஆகியோர் ஹஸ்ரத் சாஹிபிடம் பைஅத் செய்திருந்தனர். ஆனால் நான் ஹஸ்ரத் சாஹிபை பார்க்கவுமில்லை; ஹுஸூர் (அலை) அவர்களின் புகைப்படத்தையும் பார்த்ததில்லை. எனது உடலிலுள்ள அனைத்து உயிரும் வெளியேறிவிட்டதாக நான் கனவு கண்டேன். ஆனால் மூளையில் புரிவதற்கும், கண்ணில் பார்ப்பதற்குமான ஆற்றல் மட்டும் எஞ்சியிருந்தது. எனக்கு முன்னால் ஒரு பெரியவர் அமர்ந்திருக்கிறார்.அவருக்குப் பின்னால் முழங்கால் வரை ஒரு கால் தெரிகிறது.(அதாவது ஒரு பெரியவர் பின்னால் உட்கார்ந்திருக்கிறார். பின்னால் முழங்கால் வரை மட்டும் கால் தெரிந்து கொண்டிருகிறது) என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற இந்தப் பெரியவர் மிர்ஸா சாஹிப் ஆவார்; மேலும் பின்னால் தெரிந்து கொண்டிருக்கின்ற அருளுக்குரிய கால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குரியதாகும் என என் உள்ளத்தில் இடப்பட்டது. அப்போது என் கண்கள் திறந்து விட்டன. காலையில் நான், மவ்லவி அப்துல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் மகன் முர்தஸா கான் சாஹிபிடம் (அவர் தற்போது லாஹூரி பிரிவில் இருக்கிறார்) கனவுக்கான விளக்கத்தை கேட்டேன். அதற்கு அவர், ‘உனக்கு மிர்ஸா சாஹிப் மூலமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றும் நற்பேறு கிடைக்கும்’ என்றார். அப்படியே நடந்தது. நான் 1905-ஆம் ஆண்டு பைஅத் செய்தபோது கனவில் என்னைப் பார்த்துக் கொண்டிருந்த அதே நபராகவே ஹுஸூர் (அலை) அவர்கள் இருந்தார்கள். இதனை நான் இறைவன் மீது ஆணையிட்டு எழுதுகிறேன். இவ்வாறு இறைவன் தான் நாடுபவருக்கு உண்மையான வழியைக் காட்டிக் கொடுத்து விடுகின்றான்.’’

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இன்றும் எவ்வளவு மகத்தான முறையில் இந்த முன்னறிவிப்பு நிறைவேறிக்கொண்டிருக்கிறது! அல்லாஹ் எவ்வாறு தமக்கு நேர்வழி காட்டுகின்றான் என்பதற்கு ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் உள்ளவர்களும் சாட்சியாக இருக்கின்றனர். இதற்கான சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன்.

மாலீ இடத்தைச் சேர்ந்த பாலாவில் நைஜீரியா பிரிவைச் சேர்ந்த பெரிய இமாம் இருக்கிறார்கள். அவருடைய தந்தையின் மூலமாக அந்த இடத்தில் 93 கிராமங்கள் முஸ்லிம்களாயின. தமது தந்தையின் மரணத்திற்குப் பிறகு இவர் பிரதிநிதியானார். அல்லாஹ்வின் அருளால் கொஞ்ச காலத்திற்கு முன்னர் அவருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பு கிடைத்தது. ஆதம் சாஹிப் கூறுகிறார்: அவர் கனவில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரது வீட்டிலுள்ள அவருடைய அறைக்கு வந்திருப்பதாகக் கண்டார். அவர் ஹுஸூர் (அலை) அவர்களுடன் அறையில் அமர்ந்திருக்கிறார். வெளியே (அஹ்மதியல்லாத) மார்க்க அறிஞர்கள் ஹுஸூர் (அலை) அவர்களுக்காக காத்திருக்கின்றனர். ஹுஸூர் (அலை) அவர்கள் வெளியே வருகின்றார்கள். மேலும் அஹ்மதியல்லாத எல்லா மார்க்க அறிஞர்களின் தலையிலிருந்து தொப்பியை எடுத்து விடுகிறார்கள்; என் தலை மீது மட்டும் தொப்பியை இருக்கச் செய்து விடுகிறார்கள்.

அஹ்மதிய்யத்தை இவர் ஏற்றுக் கொண்ட பிறகு நமது முஅல்லிம்களுடன் தமது முரீதுகளின் பல்வேறு கிராமங்களுக்கு செல்கின்றார். அல்லாஹ்வின் அருளால் இதுவரை 40 - க்கும் அதிகமான கிராமங்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு விட்டன.

பிறகு பூர்கீனாஃபாஸோவில் நமது பல்வேறு வானொலி நிலையம் இருக்கிறது. நமது நிகழ்ச்சிகளைக் கேட்ட ஜியாரா புகாரீ சாஹிப் என்பவர் தொலைபேசியில் கூறும்போது, நான் உங்களுடைய தப்லீகைக் கேட்டேன். அதில் வர வேண்டிய மஸீஹ் இவர்தானா என்பதை நீங்கள் தெரிய வேண்டுமென்றால், அதற்காக இஸ்திகாரா செய்யுங்கள் என வாக்களிக்கப்பட்ட மஸீஹ்வழிமுறை கூறியிருப்பதையும் கேட்டேன். அந்த நாளிலிருந்து நானும் இஸ்திகாரா துஆ செய்ய ஆரம்பித்து விட்டேன் எனக் குறிப்பிட்டார். இஸ்திகாரா செய்து ஒரு வாரம்தான் ஆகியிருக்கும். நான் கனவில், ஒரு செங்கலுக்கு கீழ் இரண்டு ஒளிமயமான மனிதர்களைக் கண்டேன். கனவிலேயே அவருடைய நண்பர், வலப்பக்கம் இருப்பவர் இமாம் மஹ்தி ஆவார் எனக் கூறுகிறார். இன்னொருவரைப் பற்றி அவருக்கு தெரியவில்லை. கனவு கண்டபுகாரீ சாஹிப் கூறுகிறார்: வரக் கூடிய இமாம் மஹ்தி உண்மையாளர். அவர் பொய்யர் என்றால் (நவூதுபில்லாஹ்) எனது இஸ்திகாராவுக்கு பதிலாக எனது கனவில் அவர் எப்படி வந்திருப்பார்? எனவே நான் பைஅத் செய்து விட்டேன்.

பிறகு எகிப்திலிருந்து ஒரு பெண்மணி எழுதுகிறார்: ''இறைவன் தன் அருளினால் எனக்கு சில சிறப்புகளை வழங்கியுள்ளான். நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையும் (கலீஃபாவாகிய) உங்களையும் கனவில் கண்டேன். தற்போது உலகத்தில் ஒரு கலீஃபா இருக்கிறார் என்பது கூட எனக்குத் தெரியாது. நான் இஸ்திகாரா மட்டும் செய்து கொண்டிருந்தேன். அப்போது இறைவன் இந்த இரு சான்றோரையும் காட்டினான். ஆனால் ஷய்த்தான் என்னை வழிகெடுத்தான். ஆனால் இப்போது உண்மையை ஒப்புக்கொள்ளும் நல்வாய்ப்பை  எனக்கு அல்லாஹ் வழங்கி விட்டான். அல்லாஹ்வுக்கே நன்றி. நான் அந்த வழிகேட்டிலிருந்து வெளியே வந்து விட்டேன். நான் உறுதியாக நிலைபெற்றிருப்பதற்கும், எனது மன்னிப்பிற்கும் துஆவுக்காக வேண்டுகிறேன். அல்லாஹ் இவரை உறுதியாக நிலைபெற்றிருக்கச் செய்வானாக.

மாலீயிலிருந்து முஅல்லிம் அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:

''பாமாகோ**(Bamako)** வைச் சேர்ந்த ஆசிரியர் டாம்ப்லே**(Dambele)** என்பவர் அஹ்மதிய்யத்திற்கு கடும் எதிரியாக இருந்தார். அவர் அஹ்மதிய்யா வானொலியில் கேள்வி கேட்கும்போதெல்லாம் ஏசிப் பேசுவார். அவருடன் நாம் தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் ஏசிப் பேசுவர். இவ்வாறு செய்தவாறு நீண்ட காலம் கடந்து விட்டது. அவர் ஒருநாள் ரப்வா**FM** என்ற பெயரைக் கொண்ட அஹ்மதிய்யா வானொலிக்கு தொலைபேசியின் மூலமாக தொடர்பு கொண்டார்.  அதற்கு  ஓர் இரவுக்கு முன் அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை கனவில் கண்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அவர் கண்ட ஒளியை அவர் முன்னர் ஒருபோதும் கண்டதில்லை. எனவே அவர் இப்போது உண்மையான உள்ளத்துடன் ஜமாஅத்திடம் மன்னிப்பு வேண்டுகின்றார். அஹ்மதிகள் அவரை மன்னிக்கவில்லை என்றால், இறைவனும் அவரை மன்னிக்க மாட்டான் என அவர் அஞ்சுகிறார். அப்போது நமது முஅல்லிம் அவரிடம், உண்மை உங்களுக்கு தெளிவாகி விட்டது; இப்போது நீங்கள் பைஅத் செய்யுங்கள் எனக் கூறினார். அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்.

இவையெல்லாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைத்த ஆதரவுகளும், அடையாளங்களுமாகும். இவற்றை இறையடையாளங்கள், ஆதரவுகள் என ஒப்புக்கொள்ளவில்லையென்றால் பிறகு மக்களின் உள்ளங்களில் தாக்கங்களை ஏற்படுத்துவது எது? மற்ற முஸ்லிம்களும் இந்த உண்மையைப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இந்த உண்மையை புரிவதற்காக துஆ செய்தால், அல்லாஹ்விடம் வழிகாட்டலை வேண்டினால் எதிர்ப்புக்கு பதிலாக நேர்வழியின் பக்கம் அதிகமாக தேடல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!! அல்லாஹ் இவர்களுக்கும் வழிகாட்டுவானாக.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்  கூறுகிறார்கள் :**

''நான் இறைவன்புறமிருந்து வந்துள்ளேன் என்பதை  நிரூபிப்பதற்காக அவன் எந்த அளவுக்கு அடையாளங்களை காட்டியிருக்கிறான் என்றால், அவற்றை ஒவ்வொரு நபியிக்கும் மத்தியிலும் விநியோகம் செய்தால் அவற்றிலிருந்து அவர்களின் நபித்துவமும் நிரூபணமாக முடியும். ஆனால் இது கடைசி காலமாக இருந்தது. ஷய்த்தான் தனது எல்லா சந்ததிகளுடனும் செய்யும் கடைசி தாக்குதலாக இருந்தது. எனவே ஷய்த்தானை தோற்கடிப்பதற்காக ஆயிரக்கணக்கான அடையாளங்களை ஓரிடத்தில் இறைவன் ஒன்று சேர்த்துள்ளான். ஆயினும் மனிதர்களில் ஷய்த்தானாக இருப்பவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இட்டுக்கட்டி கூறுதல் என்ற முறையில் அநியாயமாக ஆட்சேபணைகளை செய்து விடுகின்றனர். மேலும் இறைவனால் நிலைநாட்டப்பட்ட இயக்கம் எப்படியாவது அழிந்து போகட்டும் என விரும்புகிறார்கள். ஆனால் இறைவன் தனது இயக்கத்தை - அது தனது முழுமையை அடையும் வரை தனது கைகளால் உறுதிப்படுத்த விரும்புகிறான்.

கடைசியாக, முஸ்லிம்களுக்காகவும் முஸ்லிம் நாடுகளுக்காகவும் துஆவுக்காக விண்ணப்பிக்கின்றேன். அல்லாஹ் இவர்களிடத்தில், இந்த நாடுகளில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவானாக. இந்த அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட வேண்டுமென்றால் அதற்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது. அதாவது, அல்லாஹ் எவரை இமாம் மஹ்தியாக அனுப்பியிருக்கிறானோ எவரை உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக அனுப்பியுள்ளானோ அவரை ஏற்றுக் கொள்வதாகும். எந்த முஹம்மதிய்ய மஸீஹைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் முன்னறிவித்திருந்தார்களோ அவரைப் பின்பற்ற வேண்டும். இது ஒன்றே இவர்களின் ஈடேற்றத்திற்கான வழியாகும். இதன் மூலமே குழப்பங்கள், சோதனைகள், துக்கங்கள் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற முடியும். அல்லாஹ் இவர்களுக்கு நல்வய்ப்பை வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***